இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பு

************

**ஊடக அறிக்கை**

## ‘சேவை மற்றும் அர்ப்பணிப்புடன் ஒன்றித்துள்ள புத்தபெருமான்’

## 07 மே 2020 இல் நடைபெற்ற உலகளாவிய மெய்நிகர் வெசாக் கொண்டாட்டங்களில் பிரதமர் நரேந்திர மோடி

இன்றைய வெசாக் தினத்தில் உலகளாவிய மெய்நிகர் வெசாக் கொண்டாட்டங்களின்போது உரை நிகழ்த்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி வெசாக் தின வாழ்த்துக்களை தெரிவித்திருந்ததுடன் 2015 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் டில்லியிலும் 2017 இல் கொழும்பிலும் நடைபெற்ற கொண்டாட்டங்களில் தான் கலந்துகொண்டிருந்தமையையும் நினைவு கூர்ந்தார் . இந்த வருடம் இந்திய கலாசார அமைச்சு ஓர் உலகளாவிய பௌத்த வலையமைப்பான சர்வதேச பௌத்த சம்மேளனத்துடன் இணைந்து உலகளாவிய ரீதியில் இருக்கும் பௌத்த சங்கங்களின் பிரதானிகளின் பிரதிநிதித்துவத்துடன் மெய்நிகர் (Virtual) பிரார்த்தனை நிகழ்வு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது.

நேபாளத்தில் உள்ள புனித லும்பினி பூங்கா மற்றும் இந்தியாவின் புனித ஸ்தலங்களான புத்த காயா மஹாபோதி, சாரநாத் முல்கந்தா குட்டி விகாரை, குசி நகர் பரி நிர்வாண ஸ்தூபி ஆகியவற்றிலிருந்து பிரார்த்தனை நிகழ்வுகளும் இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்கதும் புனித நகருமான அனுராதபுரத்திலுள்ள ருவான்வெலி மஹா சாயா, நேபாளத்தின் பௌத்தநாத், ஸ்வயம்பு, நமோ ஸ்தூபி ஆகியவற்றிலிருந்து பிரித் ஓதும் நிகழ்வும் இணையம் மூலமாக நேரலை ஔிபரப்பு செய்யப்பட்டது.

இந்திய பிரதமர் மோடி தனது உரையில் புத்தபெருமான் சேவை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன் ஒன்றித்தவரென்று குறிப்பிட்டிருந்தார். எந்நேரமும் , இரவு பகலாகவும் மனிதாபிமான சேவைகளில் ஈடுபடுபவர்களே புத்த பெருமானின் உண்மையான பக்தர்கள் . தற்போதைய கொவிட் 19 நெருக்கடி காலப்பகுதியில் ஏனையோருக்கு சேவையாற்றுவோர் , நோயாளிக்கு சிகிச்சை அளிப்பவர்கள் , ஏழைகளுக்கு உணவு வழங்குகின்றவர், மருத்துவமனையை சுத்தம் செய்கின்றவர்கள், வீதிகளில் சட்டம் மற்றும் ஒழுங்கினை அமுலாக்குபவர்கள், உள்ளிட்ட பலரையும் நாம் காண நேரிட்டுள்ளது . அவர்கள் அனைவரும் நாள் முழுவதும் பணியாற்றுகின்றனர் . அத்தகைய ஒவ்வொரு நபரும் ஒரு கௌரவ வணக்கத்தையோ மரியாதையையோ செலுத்த தகுதியானவர்களென்றும் பிரதமர் மோடி மேலும் தெரிவித்துள்ளார்.

கருணை, இரக்கம், இன்பத்திலும் துன்பத்திலும் அமைதி, தவறிழைத்தோர் மற்றும் நற்பண்புடையோரை சமமாக ஏற்றுக்கொள்ளல் ஆகிய 4 உண்மைகளையும் நினைவூட்டிய பிரதமர் இந்த உண்மைகள் இந்தியாவின் உள்ளுணர்வாக தொடருமெனவும் குறிப்பிட்டார் . அத்துடன் கொவிட் 19 நெருக்கடி காலப்பகுதியில் இந்தியாவின் அணுகுமுறை தொடர்பாக குறிப்பிட்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி , “ உள்நாட்டிலோ அல்லது உலகளாவிய ரீதியிலோ துன்பத்திலுள்ளவர்களுடன் எந்தவிதமான வேறுபாடுகளுமின்றி இந்தியா உறுதுணையாக உள்ளது”, என்றும் பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

* * * * *

கொழும்பு

07 மே 2020